**சாட்சிய வாக்குமூலம்**

**மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.**

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

OS.No. : 69/2023

நாள் : 26.03.2026

பி.வா.சா. : 2

பெயர் : அக்பர் அலி

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி என் மூத்த சகோதரர். என் தாயார் தகப்பனாருக்கு சொத்துக்கள் இருந்தன. என் அப்பாவின் சொத்துக்களை எனக்கும் என் தம்பிக்கும் அவர் கொடுத்தார். எனக்கும் என் தம்பிக்கும் தற்போது எந்த வேலையும் இல்லை. வாதி திருமணமாகி கிளியனூரில் வசிக்கிறார் என்றால் சரிதான். சுமார் 25, 30 வருடங்களாக வெளிநாட்டு பயணம் செய்து வருகிறார் என்றால் சரிதான். ஒவ்வொரு முறையும் ஊருக்கு வந்துபோகும்போது அப்பா, அம்மாவை பார்த்து பேசிவிட்டு செல்வார் என்றாலும் நான் இந்த வழக்கிற்காக பேச்சு வார்த்தை இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருமணமாகி வாதி தனியாக செல்ல என் அம்மா உடன்படவில்லை என்றால் சரி. தனியாக சென்றால் சொத்து கிடையாது என்று என் அம்மா சொன்னதால் வாதி சொத்து வேண்டாம் என்று எழுதிக்கொடுத்துவிட்டு சென்றார் என்றால் சரி. எழுதிக்கொடுத்த அன்று வாதிக்கு சொத்தில் உரிமை கிடையாது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் மட்டும் தான் என் அம்மா பெயரில் உள்ளது என்றால் சரிதான். என் அப்பா சிங்கப்பூரில் வேலை செய்தார் என்றால் சரிதான். அவருக்கு சிங்கப்பூரு ID கார்ட் உள்ளது. அந்த அட்டை வீட்டில் உள்ளது என்றால் இல்லை அதை அவர் ஒப்படைத்து விட்டுதான் வந்தார். அவர் பெயரில் பதினேழு லட்சம் ரூபாய் பிரோவிடன்ட் பண்ட் தொகை

சிங்கப்பூரில் இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. என் அப்பா இறந்த பிறகு அந்த தொகையை நானும் என் தம்பியும் வாங்கி கொண்டோம் என்றால் சரியல்ல. என் அம்மாவிற்கும் சின்னம்மாவிற்கும் ஒரு ஜாயின்ட் லாக்கர் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. என்னையும் என் தம்பியையும் வெளிநாடு அழைத்து சென்றது வாதி தான் என்றால் சரியல்ல. லாக்கரில் சுமார் எண்பது பவுன் நகைகள் இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. என் தாயார் இறந்தபிறகு என் சின்னம்மா லாக்கரை திறந்து நகைகளை எடுத்து எங்களுக்கு பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் அது சரியல்ல. நகைகளை வைத்து தான் என் அம்மாவிற்கு மருத்துவ செலவு செய்தோம் என்றால் சரியல்ல. எங்கள் மனைவியின் நகைகளை விற்பனை செய்து தான் மருத்துவ செலவு செய்தோம். வாதி வீட்டை விட்டு சென்றுவிட்டதால் அவருக்கு சொத்தில் உரிமை இல்லை என்றால் அது எனக்கு தெரியாது. நீடுர் ஜமாத்தில் பத்வா கொடுத்துவிட்டதால் அவருக்கு சொத்தில் பாகம் இல்லை என்று தெரிந்து கொண்டோம். இந்த வழக்கிற்கு முன்பே சொத்தில் பாகம் பிரித்து கொடுக்க சொல்லி வாதி கேட்டார். வாதி சொத்து வேண்டாமென்று சிறுவயதில் கோபத்தில் சொன்னவை சொத்துரிமையை பாதிக்காது என்றால் சரியல்ல. வாதிக்கு பாகம் கொடுக்க கூடாது என்பதற்காக நான் வீண் கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் மூன்று அண்ணன் தம்பிகள் தவிர எங்கள் சகோதரி என் பெற்றோருக்கு முன்பே இறந்துவிட்டார்.